முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வரதரிஷி அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

31.10.2018, புதன்கிழமை

1. **ஓம் என்ற சுடரே முருகா**
**ஓங்கார ஒலியே முருகா**
**ஆம் என்று உன் பதம் போற்றி**
**ஆறுமுகா என வணங்கி வர**
2. வருகவே உலக மக்களுக்கு
வாழ்வாதாரம் சிறக்குமெனக் கூறி
ஆறுமுகனார் அவதார ஞானி
அரங்கமகானுக்கு ஒளி சூட்சும நூலை
3. நூலை **விளம்பி துலை திங்கள்**
**நிலமதனில் முன்னான்கீர் திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 14ம் நாள் 31.10.2018, புதன்கிழமை)**
**ஞாலமதில் வரதரிஷி யானும்**
நாட்டிடுவேன் உலகோர் நலம்பெற
4. நலம்பெற கலிகால மக்களே
ஞானதேசிகனார் காட்டுகின்ற
பலம்தரும் தரும வழிகளை
பாடிடுவேன் ஏற்று வருதல் காண
5. காணவே இந்த கலியுகமே
கட்டாயம் தருமபலம் பெற்று
ஞானவான் ஆளுமைக்கான
ஞானயுகமாக மாற்றம் காணும்
6. காணவே அரங்கன் தருமமாம்
கலிமீட்பின் முருகன் தருமம்
ஞான அவதாரம் வழி நடக்க
நம்பி வந்து உலக மக்களெல்லாம் உதவி
7. உதவி தருமத்தை வளர்க்க
உயர்வாய் தொண்டு செய்ய
பதவி சுகம் யோகம் பலமுடன்
பாருலகில் வறுமை துன்பமில்லா
8. துன்பமில்லா வளமும் சிறப்பும்
தெய்வீக பலமும் பாதுகாப்பும்
இன்பமான யுகம் ஆகுமென்பேன்
இனிதே அரங்க ஞானி சீடர்கள்
9. சீடர்கள் தொண்டு மூலமாக
சேவை கொண்டே உலக மாற்றம்
தடையற கண்டு வருதலுற
தரணியே சர்வபலம் காண்கும்

10. காண்கவே ஞானிகள் ஆட்சி
கந்தவேலன் ஆளுமை கொண்ட
உண்மை ஆன்மீக ஞான ஆட்சி
உயர்வாய் வருமுலகில் அடைய நேரும்

11. நேருமைபட கலிகால மக்களே
ஞான தேசிகன் தொண்டுக்கு வர
பெருமை மிக்க வாழ்வாய் மாறும்
புகன்றி வந்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் வரதரிஷி அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஓம் எனப்படும் ஓங்கார ஜோதி சுடரே முருகப்பெருமானே ஓம் எனும் ஓங்கார ஒலியே முருகப்பெருமானே உமது திருவடியே உண்மையான ஞானம் என்றே ஆமோதித்து மனம் விரும்பி பயபக்தியுடன் பணிந்து சரணாகதியாகி உமது திருவடிகளைப் போற்றி ஆறுமுகப் பெருமானே என்றே வணங்கி வரவர, வணங்கினோர் வாழ்வாதாரம் சிறப்படையும் என்றே உலக மக்களுக்கு முருகா உமது திருவடிப் பெருமையை உபதேசித்து மக்களை நல்வழிப்படுத்தி ஞானமளிக்கின்ற மகா ஞானி, முருகப்பெருமானின் அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பெருமைகளை உலகமெலாம் கூறியே உலகநலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 14ம் நாள் 31.10.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே வரதரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வரதரிஷி.

கலியுக மக்களே, ஞானபண்டிதன் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டும் சர்வபலம் தருகின்ற தருமத்தின் வழிகளை ஏற்று தர்மவழிதனிலே நடந்து தர்மங்களை தளராது செய்து வாருங்கள். இந்த கலியுகம் அதனால் தர்மபலம் பெற்று ஞானவான்களான ஞானிகள் ஆளும் ஞானயுகமாக மாற்றம் காணுமப்பா.

ஆறுமுக அரங்கமகா தேசிகன் செய்கின்ற தருமச்செயல்கள் கலியுக மீட்பிற்காக முருகப்பெருமானே நேரில் அரங்கனைச் சார்ந்து செய்கின்ற தருமமாகும். முருகப்பெருமானின் தர்மங்கள் எல்லாம் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகாதேசிகனார் மூலமாக நடந்து வருகின்றது.

ஆதலினாலே உலக மக்களெல்லாம் ஆறுமுக அரங்கன் யுகமாற்றத்திற்காக செய்கின்ற அளவிலாத தானதருமங்களுக்கு பொருளுதவிகள் செய்தும் தொண்டுகள் செய்தும் வரவர, அவரவர்க்கும் பதவி சுகம் போக பலமுடன் வறுமையற்ற வாழ்வை வாழ்ந்து சிறப்படைவார்கள்.

அவர்களது வாழ்வினிலே சர்வ வளமும் உண்டான சிறப்பான நிலைகளை அடைவார்கள், தெய்வீக பலமும் பாதுகாப்பும் கிடைத்திடும்.

ஆறுமுக அரங்கனின் சீடர்களின் தொண்டுகளின் மூலமாக சேவை மனப்பான்மையுடன் செய்கின்ற தொண்டுகள் மூலமாய் உலக மாற்றம் தடையின்றி நடந்திடும். தடையின்றி அரங்கனை தரிசனம் செய்து வருவதுடன் இந்த உலகமே சர்வபலம் பெருகும்.

உலகினில் ஞானிகள் ஆட்சியான முருகப்பெருமான் நேரில் தோன்றி ஆட்சி செய்கின்றதான உயர்வான உண்மை ஆன்மீக ஞானஆட்சி வாழ்வை உயர்வான தொண்டர்களை கொண்டே அரங்கனின் சீடர்களைக் கொண்டே அமையும் உண்மை ஆன்மீக ஞான ஆட்சி உலகினில் அடைந்திடுவர்.

ஆதலினால் கலியுக மக்களே இனியும் நேர்மையுடன் நடந்து ஞானதேசிகன் தொண்டுகளைச் செய்து தொண்டிற்கு வர, அவர்களது வாழ்வு பெருமைமிக்க வாழ்வாக மாறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் வரதரிஷி.

–சுபம்–